## நிரந்தரம் நிரந்தரம்

அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உம் உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம்
நான் மாண்டபின்பும் உம்மில் உயிர்ப்பது நிரந்தரம்

நிரந்தரம் நிரந்தரம் நீரே நிரந்தரம்

தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு நீரே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீரே நிரந்தரம்
நான் சாயும் போது காப்பது நீரே நிரந்தரம்

செல்வங்கள் வளரும் இன்பத்தில் இல்லை நிரந்தரம்
பதவியும் புகழும் தருவதில்லை நிரந்தரம்
நிலைவாழ்வு என்றும் நிஜமான நீரே நிரந்தரம்
அதின் விலைவாக எனைநீர் உம்மில் இணைப்பாய் நிரந்தரம்